2. அறிவிப்பு.

(1) காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவில் 28-10-78 அன்று முதல் ஏற்படவிருக்கும் வெற்றிடங்களுக்கு திரு. வே. தங்கப்பாண்டியன், திரு. ஈ. எஸ். வெங்கடேசன் ஆகிய இருவரிடமிருந்து மட்டுமே அதற்கான வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளதால், அவ்விருவரும் உரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன்.

3. மேலவை விதி 82-ன் கீழ் விவர அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பேருந்துகள் மீண்டும் ஓடுவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மேலவை விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த காரியப்பட்டி கிராமத்தில் 13-8-1978 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நகரியக்கப் பேருந்துகளை அருப்புக் கோட்டையிலிருந்து மீனாட்சிபுரத்திற்கும், மீனாட்சிபுரத்திலிருந்து மதுரைக்கும் தேவையென முதலமைச்சருக்கும் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் விண்ணப்பிப்பது என தீர்மானிக்கப்பட்டது. இதையொட்டி 10 நபர் நடவடிக்கைக் குழு ஒன்று காரியப்பட்டியில் அமைக்கப்பட்டது. 26-8-1978 அன்று இந்த நடவடிக்கைக் குழுவானது 4-9-1978 அன்று பேருந்து மறியல் போராட்டத்தை அறிவித்து அச்சடித்த கோரிக்கைப் பிரதிகளை விநியோகித்து கோரிக்கைகளை வலியுறுத்தினர். மேற்கண்ட கோரிக்கைப் பிரதி கிடைக்கப் பெற்றவுடன் 27-8-1978 அன்று இராமநாதபுரம் மாவட்ட போக்குவரத்து அதிகாரி, அருப்புக்கோட்டை தாசில்தாருடனும், காவல்துறை அதிகாரியுடனும், பொதுமக்களையும் ஏனைய மனுதார்களையும் சந்தித்தனர். அன்று அவர்களிடம் அருப்புக்கோட்டையிலிருந்து மீனாட்சிபுரத்திற்கு இடைப்பட்ட தூரமானது 25 கி.மீ.க்கு மேல் இருப்பதால் நகரப் பேருந்து இயக்க இயலாது என்று அருப்புக்கோட்டையிலிருந்து விஜேபா நகருக்கு ஒரு நகரப் பேருந்து பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்படும் என்றும் கூறப் பட்டது. அதன்படி அந்தப் பேருந்துகளை பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகின்றது. மதுரையிலிருந்து மீனாட்சிபுரத்திற்கு பேருந்து விடுவதைப் பொறுத்தவரையிலும், மோட்டார் வாகனப் பிரிவுச் சட்டம் 57(2)